## பிறதுறை மாணவர்களுக்கான விருப்பப் பாடம்
## இந்திய ஆட்சிப்பணித் தேர்வுத் தமிழ் 2
Tamil for Indian Administrative service Exam 2

**(22TAMNME2A)**

**நோக்கம்**

- சங்க அக இலக்கியங்களிலுள்ள செவ்வியல் பண்புகளை இயம்புதல்.
- சங்க கால அக வாழ்வியலை அறியச் செய்தல்.
- சங்ககால மக்களின் வாழ்வியல் விழுமியங்களை அறியச் செய்தல்.
- மானுடத்தின் சமத்துவத்திற்காகச் சங்கச் சான்றோர்கள் நிலையாமைத் தத்துவத்தை பயன்படுத்தியுள்ளமையைத் தெரிவித்தல்.
- தமிழ்க் காப்பியங்களை விரிவாகக் கற்பிப்பதுடன் உலகக் காப்பியங்களையும் அறிமுகம் செய்தல்.
- காப்பியங்களின் கட்டமைப்புகளையும் மொழிக்கூறு உத்திகளையும் இயம்புதல்.
- சமயக் கொள்கைகளை விளக்குவதுடன் இறையன்பினையும் நற்பண்புகளையும் நவில்தல்.
- வாழ்வியலுக்கான உயர்நெறிமுறைகளை மொழிதல்.
- கவிதையின் அமைப்பு, உத்திகள், கவிதைப் படைப்பாளர்களுக்குரிய தனித்தன்மைகள் ஆகியவற்றை விளக்குதல்.
- கவிதையில் காலந்தோறும் நேர்ந்த அக, புற மாற்றங்களும் வளர்ச்சிகளும் பற்றிக் கூறுதல்.
- நாடகத்தின் வரலாறு, வளர்ச்சி, வகைமை, நடைச்சிறப்புப் போன்றவற்றை இயம்புதல்.
- நாடகத்தின் அமைப்பு, உள்ளடக்கங்கள், உத்திகள் ஆகியவற்றை எடுத்துரைப்பதுடன் நாடகத்தின் பல்வேறு சிறப்பியல்புகளையும் புலப்படுத்துதல்.
- புனைகதையையும் உரைநடையையும் அறிமுகம் செய்தல்.
- சிறுகதையின் அமைப்பு, உத்திகள், சிறுகதைப் படைப்பாளர்களுக்குரிய தனித்தன்மைகள் ஆகியவற்றை விளக்குதல்.
- புதினத்தின் அமைப்பு, உள்ளடக்கங்கள், உத்திகள் ஆகியவற்றை எடுத்துரைப்பதுடன் புதினப் படைப்பாளர்களின் படைப்பாற்றலையும் படைப்பாளர் ஒவ்வொருவருக்கும் உரிய தனித்தன்மைகளையும் மொழிதல்.
- தமிழ் உரைநடையின் வரலாறு, வளர்ச்சி, வகைமை, நடைச் சித்திரங்கள் போன்றவற்றை இயம்புதல்.
- நாட்டுப்புறவியலின் அனைத்துப் பரிணாமங்களையும் மாணவர்களுக்கு அறிமுகம் செய்தல்.
- நாட்டுப்புறவியலின் வளர்ச்சி நிலைகளைப் புலப்படுத்துதல்.

**பாடத்திட்ட அமைப்பு**

- பனுவலை நேரடியாக வாசித்து அதனைத் திறனாய்ந்துறைக்கும் ஆற்றலை வெளிக்கொணரும் வகையில் இப்பாடத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

## அலகு *1.* பழந்தமிழ் இலக்கியம் (Ancient Tamil Literature)

| | | | |
|---|---|---|---|
| *1.* | குறுந்தொகை | - | *1 - 25* பாடல்கள் |
| *2.* | புறநானூறு | - | *182 - 200* பாடல்கள் |
| *3.* | திருக்குறள் பொருட்பால் | - | அரசியலும் அமைச்சியலும் (இறைமாட்சி முதல் அவையஞ்சாமை வரை) |

## குறியிலக்குகள் (Objectives)

1. குறுந்தொகை முதல், கருப் பொருளை விட உரிப்பொருட்கே சிறப்பிடம் நல்கியமையை நவில்தல்.
2. அக இலக்கியங்களில் காணலாகும் வரலாற்றுச் செய்திகளை அறிவர்.
3. பண்டைய தமிழரின் பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், பண்டமாற்று முறைகள் முதலானவற்றை அறிந்து கொள்வர்.
4. உள்ளுறை, இறைச்சி ஆகியன பாடல்களில் இடம்பெற்றுள்ளமையை ஆய்ந்தறிவர்.
5. தலைவன், தலைவியரின் அக வாழ்வியலை அறிந்து கொள்வர்.
6. பழந்தமிழ் வேந்தர், மன்னர், குறுநில மன்னர், வேளிர் முதலானோரின் வரலாற்றை ஆராய்ந்தறியும் ஆற்றலைப் பெறுவர்.
7. புறத்திணை ஒழுகலாறுகளைக் கற்றுணர்வர்.
8. மன்னர்க்கும் புலவர்க்குமிடையே இருந்த நட்பின் சிறப்பினை அறிந்து கொள்வர்.
9. சங்க கால அரசியலையும் அரசியல் நிலையிற் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்கள் குறித்தும் விளங்கிக் கொள்வர்.
10. மக்கள் நலம் பேணும் பண்பினை அறிவர்.
11. உலகப் பொதுமை, நிலையாமை, வணிகம், வெளிநாட்டார் தொடர்பு முதலானவற்றைக் கற்றறிவர்.
12. திருக்குறள் நூலின் அமைப்பே உலக வாழ்வு பற்றிய வள்ளுவரின் பார்வையைத் தெளிவாக்குகிறது என்பதை உணர்வர்.
13. திருக்குறளின் இலக்கியத் திறனை அறிவர்.
14. இயற்கை நெறிக் கால வாழ்க்கை முறையிலிருந்து, கொலை, காமம், களவு, புலால், கள் என்பன திருக்குறளுள் கடியப்பட்டன என்பதை ஆராய்ந்தறிவர்.

## அலகு *2.* காப்பிய இலக்கியம் (Epic Literature)

| | | | |
|---|---|---|---|
| **1.** | சிலப்பதிகாரம் | - | மதுரைக் காண்டம் மட்டும் |
| **2.** | கம்பராமாயணம் | - | கும்பகர்ணன் வதை படலம் |

**குறியிலக்குகள் (Objectives)**

1. சிலப்பதிகாரக் காப்பியக் கட்டமைப்பும் பிற காப்பியக் கட்டமைப்பும், மொழிக்கூறுகளிலிருந்து வேறுபடும் திறத்தினைக் கற்றறிவர்.
2. மூவேந்தர் பற்றிய வரலாறு, குடிமக்கள் வாழ்வியல், பண்பாட்டுக் கூறுகள், சமுதாயச் சீர்திருத்தக் கருத்துகள் போன்றவற்றை அறிந்து கொள்வர்.
3. 'விருத்தமெனும் ஒண்பாவிற்கு உயர் கம்பன்' என்பதையும் காப்பியக் கட்டமைப்பில் காண்டங்கள், படலங்களின் அமைப்பு முறையையும் கம்பராமாயணம் வழிக் கற்றறிவர்.
4. கம்பராமாயணம் மூலம் வண்ணம், ஓசை, சந்த நடை, சொற்கள் பயன்பாட்டுத் திறன் போன்ற இலக்கியச் சுவைகளைக் கற்றுணர்வதுடன் பிற இந்திய மொழிகளிலுள்ள இராமாயணம் பற்றியும் அவற்றிலிருந்து கம்பராமாயணம் வேறுபட்டுத் திகழும் சிறப்பியல்புகளையும் ஆராய்ந்து அறியும் ஆற்றலைப் பெறுவர்.

**அலகு 3. பக்தி இலக்கியம்** (Devotional Literature)

1. திருவாசகம் - நீத்தல் விண்ணப்பம்
2. திருப்பாவை - (முழுவதும்)

**குறியிலக்குகள் (Objectives)**

1. மாணிக்கவாசகர் மேற்கொண்ட ஞானநெறியைப் பற்றி அறிந்து கொள்வர்.
2. 'திருவாசகத்துக்கு உருகாதார் ஒரு வாசகத்துக்கும் உருகார்' எனும் கூற்றை உணர்ந்து அறிவர்.
3. மாணிக்கவாசகர் தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் எண்ணிப் பாடிய அகத்துறை அமைப்பினைக் கற்றுணர்வர்.
4. வைணவ நெறிகள் பற்றியும், வைணவ சமய மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்த ஆழ்வார்கள் பற்றி தெரிந்து கொள்வர்.
5. ஆண்டாள் திருமால் மீது கொண்ட காதல், பக்திமை, மார்கழி மாத நோன்பு முறைகள், திருமணக் கனவை உரைக்கும் திறம், அகத்துறைகளாக அமைந்த பக்திப் பாடல்கள் ஆகியவற்றைக் கற்றறிவர்.

**அலகு 4. இக்கால இலக்கியம்** (Modern Literature)

**கவிதை** (Poetry)

1. பாரதியார் - கண்ணன் பாட்டு
2. பாரதிதாசன் - குடும்ப விளக்கு
3. நா. காமராசன் - கருப்பு மலர்கள்

**உரைநடை (**Prose)

1. மு. வரதராசனார் - அறமும் அரசியலும்

2. சி.என். அண்ணாதுரை - ஏ! தாழ்ந்த தமிழகமே!

**புதினம், சிறுகதை, நாடகம்** (Novel, Short Story and Drama)

1. அகிலன் - சித்திரப் பாவை
2. ஜெயகாந்தன் - குருபீடம்
3. சோ - யாருக்கும் வெட்கமில்லை

## குறியிலக்குகள் (Objectives)

1. மரபுக் கவிதைக்குப் பாரதி காட்டிய புதுநெறிகள், இக்கால இலக்கியம், சமூக ஆன்மீகச் சிந்தனைகளில் அவன் பாரதி ஏற்படுத்திய தாக்கம், கவிதை ஆக்கப் புதுமைகள், தனித்தன்மைகள் ஆகியவை குறித்துக் கற்றறிவர்.
2. பாரதிதாசனின் கவிதைப் பாடுபொருள்கள், சமூக அக்கறை, விழிப்புணர்வு, மரபும் புதுமையும் கலந்தமை, தனித்தன்மை, தமிழ்க்கவிதை வளர்ச்சியில் பாரதிதாசனின் பங்கு குறித்து அறிந்து கொள்வர்.
3. தமிழ்க் கவிதையில் காலந்தோறும் நேர்ந்த அக, புற மாற்றம், வளர்ச்சி, உள்ளடக்கம், வடிவமைப்பு, வெளியீட்டு முறை, வெளியீட்டு முறை மாற்றம் ஆகியவற்றைக் கற்றுணர்வர்.
4. காமராசனின் கவிதைகள்வழி சமூக அக்கறை, விழிப்புணர்வுச் சிந்தனைகள், நிறவெறி எதிர்ப்பு முதலான பாடுபொருள்களைக் கற்றறிவர்.
5. தமிழ் உரைநடை வரலாற்றுடன் பல்வேறு வகையான உரைநடைகள் குறித்து அறிவர்.
6. கட்டுரையாளர்களின் நடைச் சிறப்புகளையும் கவித்துவ உரைநடைகளையும் அறிந்து கொள்வர்.
7. அகிலனின் ‘சித்திரப் பாவை’ எனும் புதினத்தின் அமைப்பு, உள்ளடக்கம், உத்திகள், பாத்திரப் படைப்பு, நடை ஆகியவற்றைக் கற்றுணர்வர்.
8. ஜெயகாந்தன் சிறுகதையின் அமைப்பு, உத்திகள், படைப்புகளின் உருவ, உள்ளடக்க வேறுபாடுகளை இனங்காண்பர்.
9. நாடக வகைகள், இக்காலத் தமிழ் நாடகத்தில் மரபு வழித் தாக்கங்கள், புறவுலகத் தாக்கங்கள் குறித்துக் கற்றறிவர்.
10. நாடக ஆசிரியர்களையும் அவர்களின் நாடக ஆக்கத் திறன்களையும் கதை அமைப்பின் சிறப்புகளையும் உரையாடல் நயத்தையும் பாத்திரப் படைப்புகளையும் நடைச் சிறப்புகளையும் அறிந்து கொள்வர்.

## அலகு 5. நாட்டுப்புற இலக்கியம் (Folk literature)

1. முத்துப்பட்டன் கதைப்பாடல் - தொகுப்பாசிரியர் : நா. வானமாமலை<br>பதிப்புத்துறை<br>மதுரை காமராசர் பல்கலைக்கழகம்<br>மதுரை - 625 201.
2. மலையருவி - கி.வா. ஜகந்நாதன்

சரஸ்வதி மகால் நூலக வெளியீடு
தஞ்சாவூர்.

## குறியிலக்குகள் (Objectives)

1. நாட்டுப்புறப்பாடல்களின் வகைகளைக் கற்றுணர்வர்.
2. கதைப்பாடல்களின் தன்மையை அறிந்து கொள்வர்.
3. சூழலுக்கு ஏற்ப அமையும் நாட்டுப்புறப் பாடலின் தனித்தன்மையை அறிவர்.
4. சமூக வரலாற்று, புராணக் கதைப்பாடல்களுக்கு இடையேயான ஒற்றுமை வேற்றுமைகளை ஆராய்ந்தறிவர்.
5. நாட்டுப்புற மக்களிடையே நிலவும் நம்பிக்கைகள் பழக்க வழக்கங்களை அறிந்து கொள்வர் .

## பயிற்றுமுறை

- சங்க அகப்பபாடல்களைச் செவ்வியல் பண்புகளுடன் பொருத்தி இயம்புதல் வேண்டும்.
- அகப்பாடல்களில் காணலாகும் உள்ளுறை இறைச்சிக் கோட்பாடுகளை விளக்குதல் வேண்டும்.
- அகத்திணைப் பாடல்கள் ஒரு கூற்று நாடகங்களாகச் சிறப்புற்றுத் திகழ்வதை இயம்புதல் வேண்டும்.
- முதல், கரு, உரிப்பொருள்கள் பாடலில் இடம்பெற்றுள்ளமையை திணை அடிப்படையில் விளக்குதல் வேண்டும்.
- அகப்பாடல்களில் காணலாகும் வரலாற்றுச் செய்திகளையும் பிறநாட்டார் வணிகத் தொடர்பினையும் மொழிதல் வேண்டும்.
- பழந்தமிழ் இலக்கியங்களை உலக இலக்கியங்களோடு ஒப்பிட்டு இயம்புதல் வேண்டும்.
- அகத்திணைப் பகுப்புமுறைகளைப் பகர்தல் வேண்டும்.
- சங்கப் புறப் பாடல்களைச் செவ்வியல் நோக்கில் பயிற்றுவித்தல் வேண்டும்.
- பழந்தமிழ் வேந்தர், மன்னர், குறுநில மன்னர், வேளிர் முதலானோரின் வரலாற்றை ஆய்வு நோக்கில் விளம்புதல் வேண்டும்.
- மன்னர்க்கும் புலவர்க்குமிடையே இருந்த நட்பினை எடுத்துரைத்தல் வேண்டும்.
- சங்க கால அரசியல் குறித்தும் அரசியல் நிலையில் ஏற்பட்ட உள்நாட்டுப் போர்கள் குறித்தும் விளக்குதல் வேண்டும்.
- காப்பியங்களின் கட்டமைப்பு, மொழிக்கூறுகள், உத்திகள் ஆகியவற்றை இயம்புவதுடன் அரசர்களின் ஆட்சிச் சிறப்பையும் அக்காலப் பழக்க வழக்கங்களையும் எடுத்துரைக்க வேண்டும்.
- காப்பியங்களை வரலாற்று நோக்கில் அறமுகப்படுத்துவதுடன் ஒப்பீட்டு நோக்கிலும் கற்பித்தல் வேண்டும்.
- மாணிக்கவாசகரின் ஞானநெறி பற்றியும் தம்மை நாயகியாகவும் இறைவனை நாயகனாகவும் எண்ணிப் பாடிய அகத்துறை அமைப்பினையும் கற்பித்தல் வேண்டும்.

- வைணவ நெறிகள் பற்றியும் வைணவ சமய மறுமலர்ச்சிக்குக் காரணமாக இருந்த ஆழ்வார்கள் பற்றியும் மொழிதல் வேண்டும்.
- ஆண்டாள் திருமால் மீது கொண்ட காதல், பக்திமை, மார்கழி மாத நோன்பு முறைகள், திருமணக் கனவை உரைக்கும் திறம், அகத்துறையாய் அமைந்த பக்திப் பாடல்கள் ஆகியவற்றை விளக்குதல் வேண்டும்.
- மரபுக் கவிதைக்குப் பாரதி காட்டிய புதுநெறிகள், இக்கால இலக்கியம் சமூக ஆன்மீகச் சிந்தனைகளில் அவன் ஏற்படுத்திய தாக்கம், கவிதை ஆக்கப் புதுமைகள், தனித்தன்மைகள் ஆகியவை குறித்து விளக்கி உரைத்தல் வேண்டும்.
- பாரதிதாசனின் கவிதைப் பாடுபொருள்கள், சமூக அக்கறை, விழிப்புணர்வு, மரபும் புதுமையும் கலந்தமை, தனித்தன்மை, தமிழ்க்கவிதை வளர்ச்சியில் பாரதிதாசனின் பங்கு குறித்துக் கற்பித்தல் வேண்டும்.

**பாடநூல்கள்**


1. சாமிநாதையர் உ.வே. 2000. **குறுந்தொகை மூலமும் உரையும்,** சென்னை : உ.வே.சா நூல் நிலையம்.
2. துரைசாமிப்பிள்ளை சு. (உரை) 1964. **புறநானூறு,** சென்னை : கழக வெளியீடு.
3. சாமிநாதையர் உ.வே. 2000. **சிலப்பதிகாரம்,** சென்னை : உ.வே.சா. நூல் நிலையம்.
4. **கம்பராமாயணம்,** 2010. சிதம்பரம் : அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
5. மாணிக்கவாசகர். 2010. **திருவாசகம் (மூலமும் உரையும்),** சென்னை : திருமகள் நிலையம்.
6. ஆண்டாள். **திருப்பாவை.**
7. பாரதியார். **பாரதியார் கவிதைகள்.**
8. பாரதிதாசன். **குடும்ப விளக்கு.**
9. காமராசன் நா. **கறுப்பு மலர்கள்,** சென்னை : கவிதா பப்ளிக்கேஷன்.
10. வரதராசன் மு. 2004. **அறமும் அரசியலும்,** சென்னை : பாரி நிலையம்.
11. அண்ணா. 2008. **ஏ! தாழ்ந்த தமிழகமே! கலையின் நிலைமை,** சென்னை : சீதை பதிப்பகம்.
12. அகிலன். **சித்திரப்பாவை.**
13. வானமாமலை நா. (தொ.ஆ.), **முத்துப்பட்டன் கதைப் பாடல்,** மதுரை : மதுரை காமராசர் பல்கலைக் கழகம்.
14. ஜகந்நாதன் கி.வா. (தொ.ஆ.), **மலையருவி,** தஞ்சாவூர் : சரஸ்வதி மகால் நூலக வெளியீடு.


**பார்வை நூல்கள்**


1. வையாப்புரிப்பிள்ளை எஸ். 1967. சங்க இலக்கியம் **(**பாட்டும் தொகையும் **1),** சென்னை : பாரி நிலையம்.
2. வையாப்புரிப்பிள்ளை எஸ். 1967. சங்க இலக்கியம் **(**பாட்டும் தொகையும் **2),** சென்னை : பாரி நிலையம்.
3. மாணிக்கம் வ.சுப. **தமிழ்க் காதல்.**

4. முத்துக் கண்ணப்பர். **சங்க இலக்கியத்தில் நெய்தல் நிலம்.**
5. சிங்கார வடிவேலன். **சங்க இலக்கியத்தில் உவமைகள்.**
6. கந்தசாமி சோ. ந. **குறுந்தொகைத் திறனாய்வு.**
7. குருசாமி ம. ரா. போ. **சங்ககாலம்.**
8. பாலசுப்பிரமணியம் கு.வெ. **சங்க இலக்கியத்தில் புறப்பொருள்.**
9. கைலாசபதி க. 2006. **தமிழ் வீரநிலைக் கவிதை,** சென்னை : குமரன் புத்தக இல்லம்.
10. அறவாணன் க.பா. 2002. **அற்றைநாட் காதலும் வீரமும்,** சிதம்பரம் : மெய்யப்பன் பதிப்பகம்.
11. செயராமன் நா. **சங்க இலக்கியத்தில் பாடாண் திணை.**
12. வேலுப்பிள்ளை ஆ. **தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும்.**
13. கைலாசபதி க. **பண்டைத் தமிழர் வாழ்வும் வழிபாடும்.**
14. இராமையா நா. **சங்ககால நாட்டுத் தொண்டு.**
15. வித்தியானந்தன் சு. 1954. **தமிழர் சால்பு,** கண்டி : தமிழ் மன்றம்.
16. சுப்பிரமணியன் கா. **சங்ககால சமுதாயம்.**
17. அகத்தியலிங்கம் ச. 2012. **சங்க இலக்கியங்கள் செவ்வியல் இலக்கியங்களே,** சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
18. சுப்பிரமணியஆச்சாரியர் வெ.சு. 2011. **சிலப்பதிகார ஆராய்ச்சி,** சென்னை: சேகர் பதிப்பகம்.
19. சீனிச்சாமி துரை. 1994. **தமிழில் காப்பியக் கொள்கை,** தொகுதி 1,2, தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழகம்.
20. அப்துல் ரகுமான். 2008. **கம்பனின் அரசியல் கோட்பாடு,** சென்னை : நேஷனல் பப்ளிஷர்ஸ்.
21. மணவாளன் அ.அ. 2005. **இலக்கிய ஒப்பாய்வுக் காப்பியங்கள்,** சென்னை : நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
22. வையாபுரிப்பிள்ளை எஸ். **தமிழ் இலக்கிய சரிதத்தில் காவிய காலம், தொகுதி 1.**
23. காசிராஜன் இரா. **உலகக் காப்பியங்கள்,** தமிழ்ப் பதிப்பகம்.
24. மாணிக்கம் வ.சுப. **கம்பர்,** சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
25. அருணாச்சலம் பா. 1973. **பக்தி இலக்கியம் ஓர் அறிமுகம்,** சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.
26. இராகவையங்கார் மு. **ஆழ்வார்கள் காலநிலை,** சிதம்பரம் : மணிவாசகர் பதிப்பகம்.
27. மயிலை சீனி வேங்கடசாமி. **சைவமும் தமிழும்,** சென்னை : பாரி நிலையம்.
28. வல்லிக்கண்ணன். 1999. **புதுக்கவிதையின் தோற்றமும் வளர்ச்சியும்,** கும்பகோணம் : அகரம்.
29. அவ்வை சண்முகம் தி.க. 1986. **எனது நாடக வாழ்க்கை,** சென்னை.
30. சுப்பிரமணிய அய்யர் ஏ.வி. 1985. **தற்காலத் தமிழ் இலக்கியம்,** சென்னை.
31. இராமலிங்கம் மா. 1972. **இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம்,** சென்னை : தமிழ்ப் புத்தகாலயம்.
32. சிவத்தம்பி கா. 2013. **தமிழில் சிறுகதையின் தோற்றமும் வளர்ச்சியும்,** சென்னை : என்.சி.பி.எச்.

33. சிட்டி சிவபாத சுந்தரம். 1977. **தமிழ் நாவல் ஒரு நூற்றாண்டு வரலாறும் வளர்ச்சியும்,** சென்னை : கிறித்தவ இலக்கியச் சங்கம்.
34. கைலாசபதி க. 1968. **தமிழ் நாவல் இலக்கியம்,** சென்னை : என்.சி.பி.எச்.
35. பரமசிவானந்தம் அ.மு. **தமிழ் உரைநடை.**
36. இராசமாணிக்கனார் மா. **இருபதாம் நூற்றாண்டு உரைநடை வளர்ச்சி.**
37. ஜகந்நாதன் கி.வா. 1966. **தமிழ் நாவலின் தோற்றமும் வளர்ச்சியும்,** சென்னை : தமிழ் எழுத்தாளர் கூட்டுறவுச் சங்கம்.
38. சுந்தரராஜன் பெ.கோ., சிட்டி சிவபாத சுந்தரம் சோ. 1989. **தமிழில் சிறுகதை வரலாறும் வளர்ச்சியும்,** சென்னை : கிரியா.
39. லூர்து தே. 1997. நாட்டார் வழக்காற்றியல் சில அடிப்படைகள், பாளையங்கோட்டை : நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.
40. சக்திவேல் சு. நாட்டுப்புற இயல் ஆய்வு, சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
41. இராமநாதன் ஆறு. 1997 நாட்டுப்புறவியல் விளக்கங்கள், சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
42. இராமநாதன் ஆறு. 1997. நாட்டுப்புறவியல் ஆய்வுகள், சென்னை : மணிவாசகர் பதிப்பகம்.
43. அழகப்பன் ஆறு. நாட்டுப்புறப் பாடல்கள் திறனாய்வு.
44. சண்முகசுந்தரம் சு. 2003. நாட்டுப்புறவியல், சென்னை : காவ்யா பதிப்பகம்.

### இணையதள முகவரிகள்

1. www. tamilvu.org
2. www. sirukathaikal.com
3. www. noolulagam.com
4. www. katuraitamilblogspot.com

## Course Outcomes

1. Define the Structure of Epics and techniques of lingual structure.
2. Discuss the principles of religion and develop define and describe the various techniques and forms of poems, drama short story and novel.
3. Define and describe the various techniques and forms of poetry, drama, short story and novels etc.
4. Demonstrate a knowledge on the history development and types of dialogue writings in tamil.
5. Define the principles and developments of Folklore
6. Analyse and appreciate the Classical (Sevvial) properties in sangam literature.
7. Trace and discuss the developments of Folklore from ancient to the modern period.
8. Define the principles of Epic literature